**மெததும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டதுடன் அந்நிதிக்கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2018 ஜுலை 02 திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மெததும்பர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபளிக்கிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

1.3.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் டிசம்பர் 31 திகதி நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகை மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திலான பங்களிப்பு கணக்கு மீதி என்பவற்றிற்கிடையில் ரூபா 1,428,192 வித்தியாசம் கானப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,008,239 கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,296,770 பெறுமதியான பொருட்கள் பண்டக முற்பண கணக்கு முறையின் கீழ் கணக்கிடாமல் செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டில் உடல் அலங்காரம் மற்றும் உணவு தயாரித்தல் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 226,660 தொகை நிதிக்கூற்றுக்களில் விடுபட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 115,705 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 1,327,450 முத்திரை கட்டணம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக முத்திரைக்கட்டண வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 28 குப்பை வண்டிகளின் பெறுமதி ரூபா 304,942 என குறிப்பிடப்பட்ட போதும், பௌதீக ரீதியாக 10 குப்பை வண்டிகள் மாத்திரமே காணப்பட்டன.

(எ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 528,000 பெறுமதியான 160 நீர் மாணிகள் பெறுவனவின் கீழ் கணக்கிடப்பட்டிருக்காததுடன், இறுதி நீர் பண்டக இருப்பிலிருந்தும் விடுபட்டிருந்தன.

(ஏ) பிரதேச அபிவிருத்தி வங்கியில் 04 நிலையான வைப்பபுக்களிற்குரிய மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய வட்டி கணிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டில் ஏலத்தில் விற்கப்பட்ட 23 பண்ட வகைகளில் 155 உருப்படிகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டு புத்தகங்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஓ) 2 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டில் 75 கொன்கிரீட் தூண்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 41,250 தொகை மீண்டுவரும் செலவின் கீழ் கணக்கடப்பட்டிருந்தது.

1.3.2 **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) **பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 27,475,465 ஆனது. அது தொடர்பான கால பகுப்பாயிவின் படி ஆண்டு 1 முதல் 5 வரையான காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 11,948,817 மற்றும் 5 ஆண்டுகளையும் விஞ்சிய காலமாக தீர்க்கப்படாத மீதிகளின் பெறுமதி ரூபா 996,202 ஆனது.

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய 3 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 32,984,654 ஆனது. அது தொடர்பான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ஆண்டு 1-5 இடையிலான காலத்தில் தீர்க்கப்படாத மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 13,341,080 ஆனதுடன், 5 ஆண்டுகளை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,643,942 ஆக காணப்பட்டன.

1.3.3 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 37,312,839 ஆன 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

1.3.4 **இணங்காமை**

**1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் 149 ஆம் பிரிவு | | சுற்றுலாதுறை அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஹோடல்களிலிருந்து 1 சதவீத வருமானம் பெறப்படும் போது சுற்றுலாதுறை அதிகார சபையிற்கு சமர்ப்பிக்கப்படும் நிதி கூற்றுக்களின் பிரகாரம் பெறப்படாது முகாமையாளரினால் வழங்கப்பட்ட வருமான அறிக்கையொன்றின் பிரகாரம் வருமானம் பெறப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 571 (2) (ஆ) பந்தி | 5,789,310 | 2 ஆண்டுகளை விஞ்சியிருந்த வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை. |
| (இ) | 2016 மார்ச் 17 ஆம் திகதிய இலக்கம் 2016/03 கொண்ட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி | | கடையறைகளை உப குத்தகைக்கு வழங்குவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ள போதும், குத்தகைக்காரர்களால் ஏனைய நபர்களுக்கு பல்வேறு குத்தகைப்பண அறவீட்டுடன் உப குத்தகை வழங்கப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பெறுகைகள் கோவையின் 3:4 | வழிகாட்டி | 756,625 | ஓர் நிறுவனத்திலிருந்து விலை மனு கோரப்பட்டு 100 கேட்போர் கூட கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

### 1.3.4.2 வரி தேவைபாட்டுகளுடன் இணங்காமை

2010 ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 24,082 ஆன பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 1,711,330 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,652,343 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டி தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை வாடகை | 1,883,842 | 1,870,857 | 1,854,300 | 2,252,534 | 1,597,083 | 1,814,760 | 2,029,359 | 2,349,266 |
| வாடகை | 2,771,989 | 1,971,998 | 1,748,857 | 3,593,541 | 3,963,421 | 1,758,298 | 1,569,163 | 3,660,688 |
| நீர் கட்டணம் | 1,872,960 | 1,985,103 | 2,153,023 | 929,963 | 1,758,240 | 1,863,887 | 1,913,817 | 1,094,893 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,784,915 | 2,810,049 | 2,808,799 | 60,350 | 4,974,387 | 2,382,144 | 2,369,394 | 71,850 |
| ஏனைய வருமானம் | 404,580 | 484,560 | 181,040 | 1,812,060 | - | 424,080 | 477,490 | 1,676,060 |
| | 9,718,286 | 9,122,567 | 8,746,019 | 8,648,448 | 12,293,131 | 8,243,169 | 8,359,223 | 8,852,757 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான கடையறைகள் மற்றும் காணிகள் குத்தகைக்கு வழங்கி பெற வேண்டிய வருமானம் காலத்திற்குரியதாக பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகார எல்லையினுள் வியாபார நிறுவனங்களின் குப்பை கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீத வரி அறவிடுவதற்காக முன்னேற்றமடைந்த பிரதேசமென வர்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த சில பிரதேசங்களில் மக்களுக்கு தேவையான குறைந்தபட்ச வசதிகளையேனும் பெற்றுக் கொடுக்க சபை நடவடிக்கை எடுக்காததனால் அப் பிரதேசங்களிலிருந்து வீத வரி அறவிட முடியாமல் இருந்தது.

**2.2.3 வீத வரி மற்றும் வாடகை**

**(அ) வீத வரி**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய ரூபா 2,246,265 ஆன நிலுவை மீதியிலிருந்து ஆண்டினுள் ரூபா 483,871 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பில் இடல் ரூபா 1,477,899 ஆனதுடன், அம் மீதியிலிருந்து ரூபா 862,407 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வீத வரி மீதி ரூபா 2,138,051 ஆனதுடன், அம் மீதியினுள் 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,347,818 ஆன மீதி உள்ளடங்கியிருந்தது.

(ஆ) **ஏக்கர் வரி**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய ரூபா 100,000 ஆன நிலுவையிலிருந்து ஆண்டினுள் ரூபா 14,164 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 14 சதவீதமான ஆகக் குறைந்த பெறுமானமானது. ஆண்டிறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 114,483 ஆனதுடன், அம் மீதியினுள் ஓராண்டு காலத்தை விஞ்சிய ரூபா 85,856 ஆன மீதி உள்ளடங்கியிருந்தது.

2.2.4 **வாடகை**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதயன்று நிலுவை கடையறை வாடகை மற்றும் குத்தகை வாடகை மீதி ரூபா 3,593,541 ஆனதுடன், ஓராண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் நிலுவை மீதி ரூபா 2,689,013 ஆனது.

2.2.5. **அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதயன்று நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண மீதி ரூபா 60,350 ஆனதுடன், அம் மீதி 1-5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலத்திற்குரியவை ஆனது.

2.2.6 **ஏனைய வருமானம்**

(அ) **வாகன வாடகை வருமானம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 1,676,060 ஆன நிலுவை மீதியொன்று நிலவியதுடன், பில் இடல் ரூபா 484,650 ஆனது. இம் மீதிகளிலிருந்து ஆண்டின் அறவீட்டு சதவீதம் முறையே 09 மற்றும் 37 ஆனது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதயன்று ரூபா 1,812,060 நிலுவையொன்று நிலவியதுடன், அவற்றில் ஓராண்டை விஞ்சிய மீதி ரூபா 1,508,540 ஆனது.

(ஆ) **நீர்க் கட்டணம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ள ரூபா 1,094,893 ஆன நிலுவை மீதியிலிருந்து ஆண்டினுள் ரூபா 616,108 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 56 சதவீத பெறுமானமானது. மீளாய்வாண்டு திசம்பர் 31 திகதி நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 929,963 ஆனதுடன், அம் மீதியினுள் ஓராண்டு காலத்தை விஞ்சிய ரூபா 478,784 ஆன மீதி உள்ளடங்கியிருந்தது.

(இ) **கருத்தரங்கு மண்டப வருமானம்**

சபைக்கு சொந்தமான தெல்தெணிய பஸ் நிலையத்திலுள்ள கருத்தரங்கு மண்டபத்தை வாடகைக்கி வழங்குவதன் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 45,000 வருமானத்தை மாத்திரமே பெற முடியுமாக இருந்தது.

2.2.7 **நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 879,086 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 6,701,097 ஆனது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயளாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் பொது நலன், வசதிகள் மற்றும் நலன் புரி போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **துணைச் சட்டம்**

பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 33 பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ள துணைச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய போதும் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் 5 விடயங்களுக்கு மாத்திரமே துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தன.

(ஆ) **செயல் நடவடிக்கை திட்டம்**

அமுல்படுத்தப்பட்டிருந்த துணைச் சட்டங்களின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 04 விடயத்திற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **ஒதுக்கீடு வழங்கப்படாமை**

துயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் சபை மூலம் நிறைவேற்ற வேண்டியிருந்த 34 நடவடிக்கைகளில் 29 இற்கு மாத்திரம் வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு வழங்கப்பட்டதன் காரணமாக 6 நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தன.

(ஈ) **இலக்கு நோக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வருடாந்த பாதீட்டின் மூலம் 33 செயற்பாடுகளை மேற்கொள்ள உத்தேசித்திருந்த போதும், 2 செயற்பாடுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) பிரதேச சபை அதிகார சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் இலக்கு நோக்கிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக சுய சம்பாதிப்பு வருமானத்திலிருந்து 14 சத வீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தன.

(உ) **எதிர்பார்த்த விளைவுகளை (out come) பெற்றுக் கொள்ளாமை**

செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 04 நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூபா 37,202,820 செலவிட்டு எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தினை (out put) அடைந்திருந்த போதும், எதிர்பார்த்த விளைவு மட்டத்தை (out come) அடைந்து கொள்ளாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | நடவடிக்கைகள் | 2017 திசம்பர் 31 வரை செலவிட்ட தொகை | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | தெல்தெணிய பஸ் தரிப்பிடம் மற்றும் கேட்போர்கூட நிர்மாணம் | 34,336,581 | 2017 திசெம்பர் 31 திகதி வரை 18 சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படடு இருந்ததுடன், ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 45,000 மாத்திமே ஆகையால் குறைபயன்பாட்டுடன் நிலவியது. |
| (ii) | மீரியகொள்ள தாவனேவெவ புனர்நிர்மாணம் | பெறுமதியை உருதிப்படுத்த முடியவில்லை | பிரதேச சபை எல்லையில் 6 கிராமங்களின் மக்களுக்கு குடி நீர் வழங்கும் நோக்கில் 2013 ஆம் ஆண்டு இக்குலம் நிர்மாணிக்கப்பட்ட போதும், பொது மக்களுக்கு குடி நீர் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | சிறுவர் பூங்காவில் மலசல கூடமொன்று நிர்மாணித்தல் | 1,991,802 | மலசல கூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்படாததனால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | சிறுவர் பூங்காவில் மதிலொன்று நிர்மாணித்தல் | 874,437 | சிறுவர் பூங்காவை பொது மக்கள் பயன்பாட்டிற்கென உரிய தரத்தில் தயார் செய்ய மதிலொன்று நிர்மாணிக்கப்பட்ட போதும், சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படாததனால் மேற்கொள்ளப்பட்ட செலவு பயனற்றுக் காணப்பட்டது. |
| | | 37,202,820 | |

(ஊ) **கழிவுப் பொருள் முகாமை**

பிரதேச சபை அதிகார எல்லையினுள் தினந்தோறும் ஒன்று சேறும் 04 டொன் அளவான கழிவுப் பொருட்களை சபையின் டிரக்டர் மற்றும் தொழிலாளர்களை பயன்படுத்தி வேறாக்கிப் பெற்றுக் கொணடு உக்களடையும் கழிவுப் பொருட்களை குண்டசாலை இயற்கை பசளை கொட்டிலிற்கு அனுப்புவதற்கு 2017 ஆண்டினுள் ரூபா 70,295 தொகை செலவிடப்பட்டிருந்தது. உக்களடையாத பசளைகளை வேறாக்கி முடியுமான அளவை பெற்றுக்கொண்டு மீதிப் பொருட்களை பஸ் தரிப்பிடத்திற்கு அன்மையிலுள்ள காணியொன்றிற்கு இடப்பட்டிருந்ததுடன், உடிஸ்பத்துவ நகர பிரதேசத்தில் தினந்தோறும் ஒன்று சேறும் கழிவுப் பொருட்கள் ரங்கள தெல்தெணிய பிரதான வீதியிற்கு அன்மித்த பகுதியில் இடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் பிரதேசத்தில் ஒன்று சேறும் கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சிக்குட்படுத்தப்படாது சுற்றாடலிற்கு பாதிப்பேற்படும் வகையில்

இடப்பட்டிருந்தன. குப்பைகளை ஒன்று சேர்ப்பதற்காக ரூபா 9,983,570 அளவான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அச்செலவினை ஈடுசெய்யக் கூடிய வகையில் குப்பை வரி அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) நிலையான அபிவிருத்தி**

சபையினால் நிலையான அபிவிருத்தி நோக்கின் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமாக 4 கருத்திட்டங்கள் காணப்பட்டதுடன், நீர் நுகர்வோர்களின் எண்ணிக்கை 1066 ஆனது. அவற்றில் 526 நபர்களுக்கு மாத்திரம் நீர் மாணிகள் பொருத்தப்பட்டிருந்ததுடன், மீதி 540 நுகர்வோர்களிடமிருந்து ரூபா 200 ஆன நிலையான கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்தும் முன் கொண்டுவரப்பட்ட ரூபா 160,728 ஆன முற்பண மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.3 மனித வள முகாமை

**ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணிக்கிடையில், 14 பதவிகளில் 27 வெற்றிடங்கள் நிலவியதுடன், வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) சபைக்கு செந்தமான வாராந்த சந்தை, இறைச்சிக் கடை மற்றும் மீன் கடைகளை குத்தகைக்கு வழங்கியதில் 2009 ஆண்டு முதல் 2016 திசம்பர் 31 வரையான காலத்தினுள் நிலுவையாக காணப்படும் ரூபா 1,075,621 ஆன வருமானத்தை அறவிட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு செந்தமான பொருளாதார மத்திய நிலையத்தில் கடையறைகள் மற்றும் காணிகளை குத்தகைக்கு வழங்கியதில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 2,017,899 தொகை அறவிடப்பட வேண்டிய போதும், இப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்தல் மேற்கொள்ளப்படாமை

சபைக்கு செந்தமான டிரக்டர் வண்டியை பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது உரிய நடவடிக்கை எடுக்காது பல ஆண்டுகளாக செயலற்று அலுவலக வளவில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தது.

#### 3.5.2 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் பெறப்படாமை

(அ) ரூபா 1,500,000 பெறுமதியான 24,928,666 பெறுமதியான மோட்டார் கிரேடரிலிருந்து 2017 ஆண்டில் எவ்வித வருமானமும் பெறப்படாமல் அலுவலக வளவில் செயலற்று இடப்பட்டிருந்தது.

(ஆ) நீர் பவுசர் மற்றும் டிரேளரொன்றும் குறை பயன்பாட்டுடன் அலுவலக வளவில் இடப்பட்டிருந்தன.

3.5.3 **விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) மத்திய மாகாண சபையினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 பெறுமதியான கெப் வண்டியொன்று 2016 ஆண்டில் எஸ்கீஸ் கட்டலையின் மீது தடைசெய்யப்பட்டிருந்ததுடன், வண்டி துருப்பிடித்த வன்னம் சபை வளவில் நிலவியது.

(ஆ) மத்திய மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 600,000 பெறுமதியான சபைக்கு செந்தமான ஜீப் வண்டியொன்றும் மோடார் சைக்கில் ஒன்றும் 5 வருடங்களிற்கு மேலாக செயலற்று நிலவின.

3.5.4 **வருடாந்த பண்டக / இருப்புக் கணிப்பீடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 2016 ஆண்டின் நூலகப் புத்தகக் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 05 வாசிகசாலைகளில் ரூபா 64,348 பெறுமதியான 699 புத்தகங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிட முடியாத 07 புத்தகங்கள் காணாமல் போயிருந்ததுடன், இவ் இழப்புகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) தெல்தெணிய பொது நூலக நடமாடும் சேவையில் புத்தகக் கணிப்பீடு செய்கையில் ரூபா 15,999 பெறுமதியான 160 புத்தகங்களின் பற்றாக்குறை நிலவிய போதும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(இ) சில காலமாக வாசகர்களுக்கு வழங்கி மீண்டும் திருப்பி வழங்காத ரூபா 5,395 பெறுமதியான 16 வாசிகசாலை புத்தகங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

3.6 **பெறுகை**

**3.6.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டினுள் ரூபா 1,776,879 ஆன மூலதன செலவு மேற்கொள்ளப்பட்ட போதும் சபை மூலம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6.2 ஒப்பந்த நிர்வாகம்**

**வதுலியத்த பிடவத்த பாதையை அபிவிருத்தி செய்தல் 12,000,000**

மீளாய்வாண்டில் விஷேட பொருளாதார அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 மற்றும் மாகாண சபை அங்கத்தவர் உதவியின் கீழ் ரூபா 200,000 ஒதுக்கீட்டின் மீது வதுலியத்த பிடவத்த பாதை அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் HSR-ST 047 பிரகாரம் 1:2:4 (3/4) கலவையில் 5" கனதியிற்கு பாதை மற்றும் கால்வாயினை கொன்கிரீட் இட 68.4 கன மீட்டர்களிற்கு கன மீட்டரிற்கு ரூபா 14,713.50 வீதம் ரூபா 1,006,402 தொகை செலுத்தப்பட்டிருந்து. இப் பாதையை 2017 ஒக்டோபர் 18 திகதி 3 இடங்களை உடைத்து பௌதீக ரீதியாக பரீட்சித்த போது கொன்கிரீட் கட்டின் கனதி 4, 3½ மற்றும் 4 என பல அளவுகளில் நிலவின. இதன் படி மதிப்பீட்டின் பிரகாரம் பாதை கொன்கிரீட் செய்யப்படாத நிலையில் கொன்கிரீட் வேலைகளுக்காக 12.86 கன மீட்டர்களிற்கு கன மீட்டரிற்கு ரூபா 14,713.50 வீதம் ரூபா 189,216 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்து. மேலும், இப் பாதை ஆரம்பிக்குமிடத்திலிருந்து 100 மீட்டர் அளவு தூரத்தில் ஓர் இடத்தில் முற்றாக குருக்காக வெடித்திருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 4 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 170,000 ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 10 செலவின விடயங்களின் பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் செலவின விடய மாற்றல்களிற்கிடையில், 55 சதவீதம் முதல் 756 சதவீதம் வரையிலான விலகல்கள் நிலவின.

(இ) 06 செலவின விடயங்களிலிருந்து ரூபா 8,128,200 ஆன வருமானமொன்று மதிப்பிடப்பட்டிருந்த போதும், எவ்வித வருமானத்தையும் ஈட்டிக்கொள்ளவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2017 ஒக்டோபர் 19 திகதி வரையும் பிரதேச சபையின் உள்ளகக் கணக்காய்விற்கு எந்தவொறு அலுவலரும் நியமிக்கப்படவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டினுள் 3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| | ---------------------- | | -------------------------- |
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | காணி மற்றும் கட்டிடங்கள் கணிப்பீடு செய்யப்படாமை. |
| | | | |
| | | (ii) | சில நிலையான சொத்துக்கள் எவ்வித பயனுள்ள செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படாமை. |
| | | | |
| | | (iii) | அன்பளிப்பாக கிடைத்திருந்த வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் சுவீகரிக்கப்படாமை. |
| | | | |
| (ஆ) | கணக்கீடு | (i) | சபைக்கு சொந்தமான எல்லா சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கிடாமை. |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | நீண்ட காலமாக முன்கொண்டு செல்லப்படும் மீதிகள் தீர்கப்படாமை. |
| | | | |
| | | | |
| (இ) | வருமான கட்டுப்பாடு | (i) | சபை கடையறைகளில் மதிப்பீடு செயற்படுத்தப்படாமை. |
| | | | |
| | | (ii) | வியாபார அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக வருட ஆரம்பத்தில் முறையாக கணிப்பீடு செய்யப்படாமை. |
| | | | |
| | | (iii) | நிலுவை வருமானங்களை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | | |
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | (i) | நீண்ட காலமாக மாற்றமின்றி முன்கொண்டுவரப்படும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு முறையான திட்டமொன்று தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்காமை. |
| | | | |
| (உ) | ஒப்பந்தக் கட்டுப்பாடு | (i) | நிர்மாணங்களிற்காக டென்டர் நடைமுறைகள் பின்பற்றப்படாமை. |
| | | | |
| | | (ii) | சமூக அடிப்படை சங்கங்களுக்கு வழங்கப்பட்ட சில அபிவிருத்தி உத்தேசங்கள் வெற்றியின்றி காணப்படுகின்றமை. |
| | | | |
| | | (iii) | பாதை அபிவிருத்தி உத்தேசங்கள் நிறைவுற்றதன் பின் பரிசோதனை அறிக்கை (Hammer Test) பெறப்படாமல் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தமை. |
| | | | |
| (ஊ) | பண்டகக் கட்டுப்பாடு | (i) | விரைவில் சரி பிழை பார்க்கக்கூடிய வகையில் பண்டங்கள் களஞ்சியப்படுத்தப்படாமை. |
| | | | |
| | | (ii) | கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்த நிர்மாணப் பண்டங்கள் பல இடங்களில் போடப்பட்டிருந்தன. |
| | | | |